பக்கங்கள்: 08

காலைக்கதிர்
Kālaikkathir
மாலைப்பதிப்பு

சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2051 கார்த்திகை 23 ஞாயிற்றுக்கிழமை 11.12.2022 கதிர் 287

## சஜித் கட்சியின் மாநாடு இன்று

ஐக்கிய மக்கள் சக்தியின் வருடாந்த மாநாடு கொழும்பில் இன்று நடைபெறுகின்றது.

ஐக்கிய மக்கள் கட்சியின் மாநாடு இன்று பிற்பகல் 1:00 மணிக்குக் கொழும்பு, பொரளையில் உள்ள கேம்பல் பூங்காவில் ஆரம்பமாகியுள்ளது என்று கட்சியின் 2

## பாடசாலைகள் நாளை திறப்பு



பாடசாலைகளில் வழமை போன்று நாளை கல்வி நடவடிக்கைகள் இடம்பெறும் என்று கல்வி இராஜாங்க அமைச்சர் அருணாசலம் அரவிந்தகுமார் தெரிவித்தார்.

நாட்டில் நிலவிய சீரற்ற காலநிலையால் அரச 8

# தமிழர்களுக்கு நடந்த அநீதிக்கு நீதி கேட்டே போராடுகின்றோம்



### சிங்களவர்களிடம் சாணக்கியன் இடித்துரைப்பு

நாங்கள் சிங்கள மக்களுக்கு எதிராகப் போராடவில்லை. தமிழ் மக்களுக்கு நடந்த அநீதிக்கு நீதி கேட்டே ஆட்சியாளர்களுக்கு எதிராக நாங்கள் போராடுகின்றோம் – என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன் தெரிவித்தார்.

இலங்கை என்ற ஒரு நாடு மனித உரிமைகளை மதிக்காத நாடாக இருக்கும் வரைக்கும் இந்தப் பொருளாதாரத்தை ஒரு நாளும் கட்டியெழுப்ப முடியாது என்பதை தெற்கில் உள்ள மக்களும் சரி, ஆட்சியாளர்களும் சரி உங்கள் மனதில் ஆழமாகப் பதித்து வைத்துக் கொள்ளுங்கள் என்றும் அவர் 2

# வேலுகுமார் அரசுடன் இணையமாட்டார் நாரதர் கலகம் நன்மையிலேயே முடியும்



### கூட்டணியின் குடும்பப் பிரச்சினையும் விரைவில் தீரும் என்கின்றார் இராதா

வேலுகுமார் எம்.பி. எங்களில் ஒருவர். கண்டி மாவட்ட தமிழ் பேசும் மக்களின் ஏகோபித்த ஆதரவை அவர் பெற்றவர். எனவே, மக்கள் ஆணை இல்லாத இந்த அரசுடன் அவர் இணையமாட்டார். 2



## பிரபல பாடசாலை மாணவன் துப்பாக்கி ரவைகளுடன் கைது



பிரபல பாடசாலை மாணவன் ஒருவர் துப்பாக்கி ரவைகளுடன் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கரந்தெனிய பிரதேசத்திலுள்ள பிரபல பாடசாலை ஒன்றில் தரம் 12 இல் கல்வி கற்கும் 2

## ஓட்டோவுடன் மோதியது கார் ஒருவர் பலி; 2 பேர் படுகாயம்

கொழும்பில் இடம்பெற்ற கோர விபத்தில் ஓட்டோ சாரதி உயிரிழந் துள்ளதுடன் இரண்டு பெண்கள் படுகாயமடைந்துள்ளனர். 2



### சிவனொளிபாத மலைக்குப் போதைப்பொருள்:

## மேலும் 3 இளைஞர்கள் வசமாகச் சிக்கினார்கள்



சிவனொளிபாத மலை யாத்திரையின் போது ஹட்டன், நல்லதண்ணி ஊடாகப் போதைப் பொருள் கொண்டு வரும் யாத்திரிகர்களைக் கைது செய்வதற்கான விசேட நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது 8

## ராஜபக்ஷக்களை மக்கள் வெறுக்கவே இல்லை; அடுத்த ஆட்சியும் 'மொட்டு' தலைமையிலேயே!



### இப்படிக் கூறுகின்றார் சாகர

நாட்டுமக்கள் ராஜபக்ஷக்களை வெறுக்கவே இல்லை. ராஜபக்ஷக்கள் நாட்டுக்கு அவசியம்.

இவ்வாறு ஸ்ரீலங்கா பொது ஜன பெரமுனவின் பொதுச்செயலாளரான நாடாளுமன்ற உறுப்பினர் சாகர காரியவசம் தெரிவித்தார். ஸ்ரீலங்கா பொது ஜன பெரமுன கட்சி தலைமையிலேயே அடுத்த அரசு அமையும் என்றும் அவர் நம்பிக்கை வெளியிட்டார்.

அவர் மேலும் கூறுகையில்,

தேர்தலை நடத்துவது தொடர்பில் அரசும், தேர்தல் ஆணைக் குழுவுமே முடிவெ டுக்க வேண்டும். அந்தவகையில் தேர்தலை நடத்துவதற்கு நாம் இணக்கம். அடுத்த அரசு கூட மொட்டுக் கட்சி தலைமையிலேயே அமையும். உள்ளூராட்சி சபைத் தேர்தலிலும் எமக்கு வெற்றி உறுதி – என்றார்.

## இலங்கையின் கலாசாரத்தை அழிக்க அரசியல்வாதிகளை அனுமதிக்காதீர்!

### பௌத்த மகா சங்கத்தினரிடம் பேராயர் கோரிக்கை



பௌத்த மதத்தின் ஊடாக போஷிக்கப்பட்ட நாட்டின் கலாசாரத்தை அழிக்க அரசியல்வாதிகளுக்கு இடமளிக்கக் கூடாது என்று கொழும்பு பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் தெரிவித்துள்ளார். 8

## நாய் குறுக்கிட்டதால் இராணுவச் சிப்பாய் ஒருவர் உயிரிழப்பு

### மற்றொருவர் படுகாயம்

வெல்லவாய – எல்ல பிரதான வீதியில் அம்வத்த பகுதியில் இன்று இடம்பெற்ற விபத்தில் இராணுவச் சிப்பாய் ஒருவர் உயிரிழந்துள்ளார். மற்றொருவர் படுகாயமடைந்துள்ளார்.

வீதியில் பயணித்துக்கொண்டிருந்த மோட்டார் சைக்கிளுடன் வீதியைக் கடக்க முயன்ற 8

## தமிழர்களுக்கு ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
சுட்டிக்காட்டினார். சர்வதேச மனித உரிமைகள் தினத்தையொட்டி வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத்தினர் நீதி கோரி நேற்று (10) மட்டக்களப்பு கல்லடி பாலத்தில் இருந்து காந்திபூங்காவரைநடத்தியஆர்ப்பாட்டப் பேரணியில் கலந்துகொண்டு ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பல மனித உரிமைகளுக்குப் பெயர் போன நாடுதான் இலங்கை. 1948 ஆம் ஆண்டில் இருந்து மனித உரிமை மீறல்கள் பெருமளவு நடந்தன. அவை பெரும்பான்மை சமூகத்தால் எங்கள் சமூகத்துக்கு எதிராகத்தான் நடந்தன.

அண்மைக்காலங்களில் முஸ்லிம் சமூகத்துக்கு எதிராக ஜனாஸா எரிப்பு போன்ற பாரிய மனித உரிமை மீறல்கள் கூட நடந்தன.

இதன்பின்னர்தான் தெற்கில் 'கோட்டா கோ கம' போராட்டக்காரர்கள் மீது பாதுகாப்புப் படையினர் வன்முறைகளை மேற்கொண்டனர். அங்கும் பாரிய மனித உரிமை மீறல்கள் அரங்கேறின.

இதெல்லாம் வடக்கு, கிழக்கில் ஒவ்வொரு நாளும் அரங்கேறும் சர்வ சாதாரண விடயம் என்று 'கோட்டா கோ கம' போராட்டக்காரர்களிடம் நாம் கூறினோம்.

மனித உரிமை மதிக்கும் நாடாக இலங்கை மாறும் வரைக்கும் இந்த நாட்டுக்கு எதிர்காலம் இல்லை. மனிதனுக்கே மதிப்பில்லை என்றால் அவ்வாறான நாடு எவ்வாறு ஒரு ஜனநாயக வழியில் - பொருளாதார வழியில் அபிவிருத்தியடைய முடியும் என்பதைப் பெரும்பான்மை சமூகம் உணர வேண்டும்.

வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட இந்தத் தாய்மார்களின் அழுகுரல்களுக்கு விரைவில் நீதி கிடைக்க வேண்டும். நாங்கள் சிங்கள மக்களுக்கு எதிராகப் போராடவில்லை. சிங்கள மக்களால் தெரிவு செய்யப்பட்ட ஆட்சியாளர்களுக்கு எதிராகவே நாங்கள் போராடுகின்றோம். எங்கள் மக்களுக்கு நடந்த அநீதிக்கு நீதி கேட்டே நாங்கள் போராடுகின்றோம் - என்றார்.

## வேலுகுமார்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இவ்வாறு தமிழ் முற்போக்குக் கூட்டணியின் பிரதித் தலைவரும் மலையக மக்கள் முன்னணியின் தலைவருமான வேலுசாமி இராதாகிருஷ்ணன் எம்.பி. தெரிவித்தார்.

அமெரிக்கா முத்தமிழ் பல்கலைக் கழகத்துடன் இணைந்து செயலாற்றும் குளோபல் கலை கல்லூரியின் பட்டமளிப்பு விழா நுவரெலியாவில் நடைபெற்றது. இலங்கையின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் சுமார் 210 பேர் இந்தப் பட்டமளிப்பு விழாவில் தங்களுடைய பட்டங்களைப் பெற்றுக்கொண்டனர். இந்நிகழ்வுக்குக் கல்லூரியின் பணிப்பாளர் செல்லத்துரை பிரதீஸ்குமார் தலைமை தாங்கியதுடன் பிரதம அதிதியாக முன்னாள் கல்வி இராஜாங்க அமைச்சரும் நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான வேலுசாமி இராதாகிருஷ்ணன் கலந்து கொண்டார்.

அத்துடன் இந்தியாவின் தமிழ்நாட்டில் கோயம்புத்தூர் நாகர்கோவில் மாவட்டங்களில் இருந்து வருகை தந்த நடனத்துறை கலைஞர்களும், ஆசிரியர்களும் இந்நிகழ்வில் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

மேற்படி நிகழ்வில் பிரதம அதிதியாக இராதகிருஷ்ணன் எம்.பி. கலந்து கொண்ட பின், அவரிடம் ஊடகவியலாளர்கள் வரவு - செலவுத் திட்டத்தின் இறுதி வாக்கெடுப்பின்போது தமிழ் முற்போக்குக் கூட்டணியின் முடிவுக்கு மாறாக (நடுநிலை) வேலுகுமார் செயற்பட்டமை தொடர்பில் எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தமிழ் முற்போக்குக் கூட்டணியில் தற்போது உள்ள ஐவரும் பஞ்ச பாண்டவர்கள் போல் அண்ணன் - தம்பிமார். எங்களுக்குள் ஏற்படும் சிற்சில பிரச்சினை அண்ணன், தம்பிமாருக்கிடையில் ஏற்படும் குடும்பப் பிரச்சினை போன்றுதான். அதனை நாம் எங்களுக்குள் பேசித் தீர்த்துக்கொள்வோம். அந்த வகையில் இப்பிரச்சினையும் விரைவில் தீரும். இணைந்து பயணிப்போம்.

ஜனநாயகக் கட்டமைப்புக்குள் கருத்து முரண்பாடுகள்தான் அமைப்பைச் சரியாக வழிநடத்த உந்துசக்தியாக அமையும். நாரதர் கலகம் நன்மையில் முடியும் என்பார்கள். இந்த ஆரோக்கியமான சண்டையும் நன்மையில் முடியும் என்றே நம்புகின்றேன்.

தான் எடுத்த முடிவு சம்பந்தமாக வேலுகுமார் எமக்குத் தெளிவுபடுத்துவார் என எதிர்பார்க்கின்றோம். அவர் அரசு பக்கம் செல்லமாட்டார்.

அதேவேளை, இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு சம்பந்தமாக பேச்சு நடத்துவதற்காக எமக்கும் ஜனாதிபதி அழைப்பு விடுத்துள்ளார். அந்தச் சந்திப்பில் நாமும் பங்கேற்போம் - என்றார்.

## சஜித் கட்சி......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பொதுச்செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்தார்

இந்த மாநாட்டில் பங்கேற்கப் பலர் அணிதிரண்டுள்ளனர்.

கட்சி உறுப்பினர் ஒருவர் கருத்துத் தெரிவிக்கையில், வரவிருக்கும் உள்ளூராட்சி சபைத் தேர்தலை எதிர்கொள்ளும் கட்சியின் பலத்தை வெளிப்படுத்தும் நோக்கில் இந்த மாநாடு நடத்தப்படுகின்றது - என்றார்.

மேலும், ஐக்கிய மக்கள் சக்திக்கு ஆதரவாகக் கூட்டணிக் கட்சிகளைச் சேர்ந்த ஏராளமான உறுப்பினர்களும் மாநாட்டில் பங்கேற்றுள்ளனர் என்றும் அவர் மேலும் கூறினார்.

## பிரபல பாடசாலை......

மாணவனேரி-56ரகதுப்பாக்கிக்குப் பயன்படுத்தப்படும் 15 ரவைகளுடன் கைது செய்யப்பட்டுள்ளார்.

கிடைக்கப் பெற்ற இரகசியத் தகவலுக்கு அமைய வீட்டின் அறையில் மறைத்து வைக்கப்பட்டிருந்த துப்பாக்கி ரவைகளைக் கைப்பற்றச் சென்ற போது, பொலிஸ் அதிகாரிகளின் கடமைக்கு இடையூறு விளைவித்த குற்றத்துக்காக அவரது தந்தையும் கைது செய்யப்பட்டுள்ளார் என்று கரந்தெனிய பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த மாணவனுக்குத் துப்பாக்கி ரவைகள் எவ்வாறு கிடைத்தன? அவர் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றக் குழுக்களுடன் தொடர்பைப் பேணி வந்தாரா? என்பவை தொடர்பில் பொலிஸார் தீவிர விசாரனைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## ஓட்டோவுடன்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கொழும்பு - கொள்ளுப்பிட்டி கார்கில்ஸ் வங்கிக்கு முன்னால் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

குறித்த வீதியில் பயணித்த கார் ஒன்று வேகக்கட்டுப்பாட்டை இழந்து முன்பாகச் சென்ற ஓட்டோவுடன் மோதுண்டது.

சம்பவத்தில் பலத்த காயமடைந்த ஓட்டோ சாரதி கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டபோது உயிரிழந்துள்ளார்.

இந்த விபத்தில் படுகாயமடைந்த இரண்டு பெண்கள் சிகிச்சைகளுக்காகக் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் கொள்ளுப்பிட்டிப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்




நமது பார்வை
உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## மைத்திரியின் எதிர்காலம்

ஸ்ரீலங்கா சுதந்திர கட்சித் தலைவர் மைத்திரிபால சிறிசேனாவுக்கு இது போதாத காலம் போலும். சிக்கல்கள் சிக்கெடுக்கக் காத்திருக்கின்றன.

ஏற்கனவே கட்சியின் 14 எம்.பிக்களில் கணிசமானோர் அவரின் கட்டுப்பாட்டை மீறி, தம்பாட்டில் தீர்மானம் எடுத்து, கட்சியின் முடிவுக்கு மாறாக, அமைச்சர் பதவிகளை ஏற்றுக் கொண்டு போய் விட்டனர். அதனால் அவர்களை எல்லாம் கட்சியிலிருந்து இடைநிறுத்தி அறிவிப்புக் கொடுத்தது அவரது கட்சி.

இந்த முறை பொதுத் தேர்தலை அடுத்து 14 எம்.பிகளுடன் நாடாளுமன்றுக்குப் போன அவருடன் இப்போது ஒரு சில எம்.பிக்கள்தான் மிஞ்சி இருக்கின்றனர். அதுவும் கூட எத்தனை நாளைக்கு என்பதுதான் கேள்வி.

ஏற்கனவே நல்லாட்சி அரசின்போது மைத்திரியார் தம்மை ஜனாதிபதியாக்கிய ரணில் விக்கிரமசிங்கவை பிரதமர் பதவியில் இருக்க விடாமல் பண்ணிய சண்டப் பிரசண்டம் தெரிந்ததுதான். இப்போது முறை, ஜனாதிபதி பதவியில் இருக்கும் ரணிலின் கைகளில் போலும். அவர் காய் நகர்த்தப் போகின்றார்.

உயிர்த்த ஞாயிறு தினத்தாக்குதல் தொடர்பில் விசாரணை செய்த ஜனாதிபதி ஆணைக்குழுவின் முழுமையான விசாரணை அறிக்கை விரைவில் பகிரங்கப்படுத்தப்படவுள்ளது என செய்திகள் வெளியாகியுள்ளன.

ஏற்கனவே இந்த அறிக்கையின் சில பகுதிகள் மட்டும் நாடாளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டன. ஆனால் எஞ்சிய அறிக்கையையும் சபையில் சமர்ப்பிக்குமாறு பேராயர் மல்கம் ரஞ்சித் ஆண்டகை உட்பட்ட தரப்பினர் அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்து வந்தனர்.

இந்நிலையில் எஞ்சிய அறிக்கையையும் நாடாளுமன்றுக்குச் சமர்ப்பிக்குமாறு ஆளுங் கட்சியின் எம்.பிக்கள் ஜனாதிபதியிடம் எழுத்து மூலம் கோரிக்கை விடுத்தனர். அதன் அடிப்படையில் அதனை முழுமையாக சபையில் முன்வைக்க ஜனாதிபதி ரணில் தீர்மானித்துள்ளார் என்று கூறப்படுகின்றது.

எஞ்சிய அறிக்கைப் பகுதிகளும் நாடாளுமன்றத்திற்கு வருமாயின், முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால மற்றும் அவரது ஆட்சியின்போது செயற்பட்ட உயர் பாதுகாப்பு அதிகாரிகள் தொடர்பான பரபரப்புத் தகவல்கள் வெளியாகுமென எதிர்பார்க்கப்படுகிறது.

அவை வெளிவந்தால் மைத்திரிபால சிறிசேனவின் எதிர்கால அரசியல் சூனியமானாலும் ஆச்சரியப்படுவதற்கு இல்லை.



## மீண்டும் வரிசை யுகம் நேற்று அச்சுவேலியில்!

அச்சுவேலி எரிபொருள் நிரப்பு நிலையத்தில் மண்ணெண்ணெயைப் பெற மக்கள் நீண்ட வரிசையில் காத்திருந்தனர்.

ஆறு மாதங்களின் பின்னர் அந்தப் பகுதியில் பொதுமக்கள் மற்றும் விவசாயிகள் ஆகியோருக்கான மண்ணெண்ணெய் நேற்று (சனிக்கிழமை) வழங்கப்பட்டது.

மண்ணெண்ணையைப் பெறுவதற்கு 500 இற்கும் மேற்பட்ட மக்கள் பல மணி நேரமாகக் காத்திருந்து மண்ணெண்ணெயைப் பெறவேண்டிய நிலைமை ஏற்பட்டது.

குடும்ப பங்கிட்டு அட்டையின் பிரகாரம் மண் ணெண்ணெய் வழங்கப்படுகின்றமையால் 3000 ரூபாவுக்கு மாத்திரமே மண்ணெண்ணெய் வழங்கப்படுகிறது எனவும் விவசாயத் தேவைகளுக்கு மண்ணெண்ணெய் போதியளவில் இல்லை என்றும் பொதுமக்கள் விசனம் தெரிவித்தனர்.

## கொழும்பு மற்றும் யாழில் இன்று காற்று மாசுபாடு!



இன்று (ஞாயிற்றுக்கிழமை) காலை 09 மணியளவில் காற்றின் தரக் குறியீட்டின் மதிப்புகள் மீண்டும் ஆரோக்கியமற்றனவாக மாறியுள்ளது.

அதன்படி, கொழும்பு 103, தம்புள்ளை 117, யாழ்ப்பாணம் 153, கண்டி 157, இரத்தினபுரி 112 மற்றும் குருநாகல் 100 என காற்றின் தரக் குறியீட்டு மதிப்புகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

உணர்திறன் கொண்ட குழுக்களுக்கு 101 – 150 வரம்பு ஆரோக்கியமற்றதாகக் கருதப்படுகிறது.

## இலங்கையின் கடன் நெருக்கடியை தீர்ப்பதற்கு சீனா பச்சைக்கொடி!

சாம்பியா மற்றும் இலங்கை போன்ற நாடுகளுக்கான கடன் மறுசீரமைப்பு தொடர்பாக சீனாவுடனான பேச்சு பயனுள்ள வகையில் நிறைவடைந்துள்ளதாக ஐ.எம்.எப். தெரிவித்துள்ளது.

இரு நாடுகளுக்கான விரைவான கடன் மறுசீரமைப்பு தொடர்பாக விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு சீனா சாதகமாக பதிலளித்துள்ளது என அதன் தலைவர் கிறிஸ்டலினா ஜோர்ஜிவா தெரிவித்துள்ளார்.

சர்வதேச நாணய நிதியத்தின் தலைவருக்கும் சீனப் பிரதமருக்கும் இடையிலான பேச்சின் பின்னர் இந்த நம்பிக்கையான பதில் கிடைத்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மூன்று நாடுகளைச் சேர்ந்த தூதுவர்கள் யாழ். விஜயம்!

தாய்லாந்து , இந்தோனேசியா மற்றும் வியட்நாம் ஆகிய நாடுகளின் தூதுவர்கள் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்துள்ளனர்.

நேற்று (சனிக்கிழமை) யாழ்ப்பாணத்துக்கு இவர்கள் விஜயம் செய்தனர்.



இதன்போது சிறுப்பிட்டி பகுதியில் அமைந்துள்ள தொழில் திறன் பயிற்சிமையத்தையும் பார்வையிட்டனர்.

அங்கு நெசவுப் பயிற்சியில் ஈடுபடும் நிலையத்தைப் பார்வையிட்டதுடன், பெண்களின் அபிவிருத்தி தொடர்பில் மேற்கொள்ள வேண்டிய உதவிகள் தொடர்பிலும் கேட்டு அறிந்து கொண்டனர்.

மேலும் இந்தத் தூதுவர் குழு நல்லூர் ஆலயத்தில் வழிபாடுகளில் ஈடுபட்டதோடு, யாழ் கோட்டைக்கும் விஜயமொன்றையும் மேற்கொண்டிருந்தனர்.

# உக்ரைனில் நடந்து வரும் தற்போதைய யுத்தம் ரஷ்யா– நேட்டோ போராக உருவெடுக்கலாம்

## நேட்டோ அமைப்பின் பொதுச்செயலாளர் எச்சரிக்கை




உக்ரைனில் நடந்து வரும் போர் ரஷ்யா – நேட்டோ போராக உருவெடுக்கும் அபாயம் உள்ளதாக நேட்டோ அமைப்பின் பொதுச்செயலாளர் எச்சரித்துள்ளார்.

அமெரிக்கா, கனடா மற்றும் 28 ஐரோப்பிய நாடுகளை உள்ளடக்கிய இராணுவக் கூட்டமைப்பு நேட்டோ. உலகின் மிகவும் வலிமையான இராணுவக் கூட்டமைப்பாக அறியப்படும் இந்த அமைப்பில் இணைவதற்கு கிழக்கு ஐரோப்பிய நாடான உக்ரைன் விருப்பம் தெரிவித்தது. நேட்டோவும் இதற்கு சம்மதம் தெரிவித்தது. இந்த சூழலில் உக்ரைன் நேட்டோவில் இணைவதற்கு கடும் எதிர்ப்பு தெரிவித்து வந்த அதன் அண்டை நாடான ரஷ்யா உக்ரைன் மீது கடந்த பெப்ரவரி மாதம் போரை தொடங்கியது. இன்னும் சில தினங்களில் இந்த போர் 11 ஆவது மாதத்தை எட்டவுள்ளது.

இந்தப் போரில் நேட்டோ உறுப்பு நாடுகள் நேரடியாகப் பங்கேற்கவில்லை என்றாலும் உக்ரைனுக்கு தேவையான இராணுவ மற்றும் நிதியுதவிகளை வழங்கி பக்கபலமாக இருந்து வருகின்றன. ஆனால் ரஷ்யாவோ உக்ரைன் போரில் அமெரிக்காவும் பிற நேட்டோ நாடுகளும் நேரடியாகப் பங்கேற்பதாக குற்றம் சாட்டி வருகிறது. ரஷ்யாவுக்கு எதிராக பயன்படுத்துவதற்காக உக்ரைனுக்கு அதிநவீன ஆயுதங்களை அனுப்புவது, உக்ரைன் வீராகளுக்கு தங்கள் நாடுகளில் போர்ப் பயிற்சியளிப்பது, ரஷிய நிலைகள் மீது தாக்குதல் நடத்துவதற்காக உக்ரைன் ராணுவத்துக்கு உளவுத் தகவல்கள் மற்றும் ஆலோசனைகளை அளிப்பது போன்ற நடவடிக்கைகள் மூலம் போரில் மேற்கத்திய நாடுகள் நேரடியாக பங்கேற்பதாக ரஷியா கூறுகிறது.

எனவே உக்ரைனில் நேட்டோ தளவாடங்கள் மற்றும் அந்த அமைப்பின் அதிகாரிகளைக் குறிவைத்துத் தாக்குதல் நடத்த தங்களுக்கு சட்டபூர்வ உரிமை உள்ளது என்றும் ரஷ்யா எச்சரித்து வருகிறது.

இந்த நிலையில் உக்ரைனில் நடந்து வரும் போர், தங்களது அமைப்புக் கும் ரஷ்யாவுக்கும் இடையிலான போராக உருவெடுப்பதற் கான அபாயம் உள்ளதாக நேட்டோ அமைப்பின் பொதுச் செயலா ஜென்ஸ் ஸ்டால்டன்பாக் எச்சரித்துள்ளார்.

நோர்வே நாட்டின் முன்னாள் பிரதமரான ஜென்ஸ் அந்த நாட்டின் தொலைக்காட்சி ஒன்றுக்கு அளித்த பேட்டியின்போது இதுகுறித்து கூறியதாவது:– மிகப்பெரிய போராக உருவெடுக்கும் உக்ரைனில் நடந்து வரும் போா மிகவும் அபாயகரமானது. அதில் ஒரு சிறு தவறு நேர்ந்தால் கூட நேட்டோவுக்கும் ரஷ்யாவுக்கும் இடையிலான மிகப்பெரிய போராக உருவெடுக்கக் கூடிய அபாயம் உள்ளது. அதனைத் தவிர்ப்பதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் நாங்கள் மிகுந்த கவனத்துடன் மேற்கொண்டு வருகிறோம். தற்போது உக்ரைனில் மட்டும் நடைபெற்று வரும் சண்டை, ஐரோப்பாவின் மற்ற நாடுகளுக்கும் பரவி, முழுப் போராக உருவெடுப்பதற்கான சாத்தியக்கூறுகள் இருப்பதில் யாருக்கும் எந்த சந்தேகமும் வேண்டாம். அதே வேளையில் அதனைத் தடுப்பதற்கான எச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியதன் அவசியத்தையும் யாரும் அலட்சியப்படுத்திவிடக் கூடாது. – இவ்வாறு ஜென்ஸ் ஸ்டால்டன்பாக் கூறினார்.

# பிரிட்டனின் ஜெர்சி தீவில் இன்று குண்டுவெடிப்பில் ஒருவர் மரணம்

## பத்துப் பேரைக் காணவில்லை



லண்டன்: பிரிட்டனின் ஜெர்சி தீவின் தலைநகரான செயின்ட் ஹீலியரில் இன்று மூன்று தளங்கள் கொண்ட குடியிருப்பு கட்டடத்தில் திடீரென குண்டுவெடித்தது போன்று பலத்த சத்தம் எழுந்தது. சத்தம் வந்த சில வினாடிகளில் கட்டடம் இடிந்து விழுந்தது. இதில் கட்டடம் முழுமையாக சிதைந்து தரைமட்டமானது. அதில் வசித்தவர்கள் இடிபாடுகளில் சிக்கிக்கொணடனர். அருகில் உள்ள குடியிருப்பு கட்டடமும் சேதமடைந்தது.

விபத்து பற்றி தகவல் அறிந்த பொலிஸார் மற்றும் மீட்புக்குழுவினர் சம்பவ இடத்திற்குச் சென்று மீட்பு பணியில் ஈடுபட்டுள்ளனர். அம்புலன்ஸ்களும் வரவழைக்கப்பட்டன. இந்த விபத்தில் ஒருவர் உயிரிழந்தார். மேலும் 2 பேர் பலத்த காயங்களுடன் மீட்கப்பட்டு மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். 10க்கும் மேற்பட்டோரைக் காணவில்லை. அவர்கள் இடிபாடுகளில் சிக்கியிருக்கலாம் என அஞ்சப்படுகிறது. மீட்பு பணி தொடர்ந்து நடைபெறுகிறது. இந்த விபத்தில் உயிரிழந்தவாக்ளுக்கு ஜெர்சி முதல்வர் கிறிஸ்டினா மூர் இரங்கல் தெரிவித்துள்ளார். மேலும் குண்டுவெடிப்பால் இடம்பெயர்ந்தவர்கள் தங்குவதற்கு ஏற்பாடு செய்யப்படும் என்றும் கூறினார்.

# நிலவை ஆய்வு செய்ய அனுப்பப்பட்ட விண்கலம் இன்று பூமி திரும்புகிறது



நிலவை ஆய்வு செய்வதற்காக நாசாவின் ஆர்டெமிஸ் 1 ஓரியன் விண்கலம் கடந்த நவம்பர் மாதம் 16 ஆம் திகதி விண்ணில் ஏவப்பட்டது. இந்த விண்கலம் நவம்பர் 25 ஆம் திகதி முதல் சந்திரனை சுற்றி ஆய்வு செய்தது. மிக அருகில் நிலவின் புகைப் படங்களையும் எடுத்து அனுப்பியது. இந்த நிலையில் ஆர்டெமிஸ் 1 ஓரியன் விண்கலம் நிலவில் தனது பணிகளை முடித்துக் கொண்டு அதன் சுற்றுப்பாதையில் இருந்து வெளியேறி கடந்த வாரம் பூமிக்கு திரும்ப தொடங்கியது. இன்று இரவு 11.10 மணிக்கு இந்த விண்கலம் பசிபிக் பெருங்கடல் பகுதியில் உள்ள குவாடாலூப் தீவு அருகே தரை இறங்கும்படி திட்டமிடப்பட்டுள்ளது. விண்கலம் பாதுகாப்பாக பூமிக்கு திரும்பும் ஏற்பாடுகளை நாசா செய்து வருகிறது.

ஓரியன் விண்கலம் பசிபிக் பெருங்கடலில் விழுவதற்கு முன்பு அதன் சேவை தொகுதியில் இருந்து குழு தொகுதி பிரிக்கப்படும். சேவை தொகுதி பூமியின் வளிமண்டலத்தில் எரிந்துவிடும். விண்கலத்தின் மீதமுள்ள பாகங்கள் நிலம், மக்கள் மற்றும் கப்பல் வழித்தடங்களுக்கு எந்தவித அச்சுறுத்தலையும் ஏற்படுத்தாத வகையில் அது பூமிக்கு திரும்ப நாசா திட்டமிட்டுள்ளது. சேவைத் தொகுதியில் இருந்து பிரிந்த பிறகு ஓரியன் குழு தொகுதி விண்கலம் தரை இறங்க 'ஸ்கிப் என்ட்ரி' நுட்பத்தை பயன்படுத்தும். இது வருங்கால ஆர்டெமிஸ் திட்டத்துக்கு உதவியாக இருக்கும் என்று நாசா கூறுகிறது. விண்கலம் பாராசூட் உதவியுடன் தரை இறங்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பிரதமர் ஷேக் ஹசீனாவுக்கு எதிராக வங்காளதேசத்தில் எதிரணி கிளர்ச்சி

டாக்கா, டிச.11


வங்காளதேசத்தின் பிரதமராகப் பதவி வகித்து வருபவர் ஷேக் ஹசீனா. அவருக்கு எதிராக கோலாபாக் மைதானத்தில் எதிர்க்கட்சியான வங்காளதேசம் தேசிய கட்சியினர் திரண்டு போராட்டம் நடத்தி வருகின்றனர். ஷேக் ஹசீனா வாக்குகளை திருடிவிட்டார் என அவர்கள் குற்றம் சாட்டி கோமிட்டனர். மேலும் அவர்கள் பிரதமர் ஷேக் ஹசீனா பதவி விலக வேண்டும், விரைவில் தேர்தல் நடத்த வேண்டும் என கோங்கள் எழுப்பினர். எதிர்க்கட்சிகளைச் சேர்ந்த 7 எம்.பிக்கள் தங்களது பதவியை ராஜினாமா செய்யப்போகின்றனர் என அறிவித்தனர். நாடாளுமன்றத்தைக் கலைத்து, நடுநிலையான காபந்து அரசாங்கம் அமைத்து, சுதந்திரமான, நம்பகத் தன்மையுடன் தேர்தலை நடத்த வேண்டும் என்பதே எங்களது முக்கிய கோரிக்கை என எதிர்க்கட்சியின் தெரிவித்தனர்.

எதிர்க்கட்சியினர் உள்பட 10 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் போராட்டத்தில் ஈடுபட்டனர். இதனால் தலைநகர் டாக்காவில் பதற்ற நிலை உருவாகியுள்ளது.



# தெற்கு அந்தமான் கடல் பகுதியில் அடுத்த புயல் உருவாகி வருகிறதாம்

## இலங்கை, தமிழகத்தைப் பதம் பார்க்கலாம்



நாளை மறுதினம் 13ஆம் திகதி தெற்கு அந்தமான் கடல் பகுதியில் மேல் அடுக்கு சுழற்சி உருவாகிறது. அது புயலாக மாறுமா என்பது அடுத்தடுத்த நாள்களில் தெரிய வரும் எனக் கூறப்படுகிறது.

வங்க கடலில் உருவான மாண்டஸ் புயல் நேற்று முன்தினம் நள்ளிரவில் கரையைக் கடந்தது. மாமல்லபுரம் அருகே புயல் கரையை கடந்த போது பலத்த காற்று வீசியது. மரங்களும் வேரோடு சாய்ந்தன. மின் கம்பங்களும் சாய்ந்து விழுந்தன. சென்னை மற்றும் புறநகர் பகுதிகளிலும், மாமல்லபுரம் சுற்று வட்டார பகுதிகளிலும் புயலால் ஏற்பட்ட பாதிப்புகளை அதிகாரிகள் மின்னல் வேகத்தில் சரி செய்தனர். இதனால் இயல்பு வாழ்க்கை திரும்பி வருகிறது.

இந்த நிலையில் தெற்கு அந்தமான் கடல் பகுதியில் புதிய புயல் உருவாக வாய்ப்பு இருப்பதாக தகவல் வெளியாகி உள்ளது. இது தொடர்பாக இந்திய வானிலை மையம் இன்று தகவலை வெளியிட்டுள்ளது. அதில் வருகிற 13ஆம் திகதி தெற்கு அந்தமான் கடல் பகுதியில் மேல் அடுக்கு சுழற்சி உருவாகிறது. இது புயலாக மாறுமா என்பது அடுத்தடுத்த நாட்களில் தெரிய வரும். 13ஆம் திகதிக்குப் பிறகே அது தொடர்பான கூடுதல் தகவல்கள் தெரிய வரும் என்று தெரிவித்துள்ளது. மாண்டஸ் புயல் கரையை கடந்து ஓய்ந்துள்ள நிலையில் இந்திய வானிலை ஆய்வு மையம் புதிய புயல் அறிவிப்பை வெளியிட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. இந்த மேலடுக்கு சுழற்றி வலுப்பெற்று புயலாக மாறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. 13ஆம் திகதி வளிமண்டல மேலடுக்கு சுழற்சி உருவான பின்னர் அது 17, 18, 19 ஆகிய திகதிகளில் புயலாக மாறி கரையை கடக்க வாய்ப்பு இருப்பதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. இந்த புதிய புயல் இலங்கை மற்றும் அதனை ஒட்டிய தமிழக பகுதிகளின் அருகில் கரையை கடக்க வாய்ப்புள்ளது என்றும் கூறப்படுகிறது. புயல் கரையை கடக்கும் பகுதிகள் மற்றும் அதனை சுற்றியுள்ள இடங்களில் தொடர் மற்றும் கனமழை பெய்ய வாய்ப்பு இருப்பதாகவும் தகவல்கள் வெளியாகி உள்ளன. புதிய புயல் உருவாகும் பட்சத்தில் தமிழக கடலோர பகுதிகளில் மீண்டும் மழை பெய்வதற்கான வாய்ப்புகள் ஏற்பட்டுள்ளன. புதிய புயலின் தாக்கம் எப்படி இருக்கும், அது எந்த மாதிரியான பாதிப்புகளை ஏற்படுத்தும் என்பது போன்ற விரிவான தகவல்களை வானிலை மையம் அடுத்தடுத்த அறிவிப்புகளில் வெளியிடும் என்று எதிர் பார்க்கப்படுகிறது.

# திருமண வீட்டில் சிலிண்டர் வெடித்ததில் பலியானோர் எண்ணிக்க 12 ஆக உயர்வு!

## காயமுற்ற 42 பேருக்கு தொடர்ந்து சிகிச்சை



ஜெய்ப்பூர், டிச.12

திருமண வீட்டில் சிலிண்டர் வெடித்த சம்பவத்தில் உயிரிழந்தோர் எண்ணிக்கை 12 ஆக அதிகரித்துள்ளது.

ராஜஸ்தான் மாநிலம் ஜோத்பூர் மாவட்டம் பஹிங்ரா கிராமத்தில் கடந்த வியாழக்கிழமை திருமண நிகழ்ச்சி நடைபெற்றுக்கொண்டிருந் தது. அப்போது, திருமண வீட்டில் உணவு தயார் செய்து கொண்டிருந்தபோது காஸ் சிலிண்டர் வெடித்து சிதறியது. கியாஸ் கசிவு காரணமாக ஒரு சிலிண்டர் வெடிக்க அடுத்தடுத்து அருகில் இருந்த சிலிண்டர்களும் வெடித்தன. இந்தக் கோர விபத்தில் திருமண வீட்டில் தீப்பற்றியது. இந்த விபத்தில் சம்பவ இடத்திலேயே 2 பேர் உயிரிழந்த னர். மேலும், பலர் படுகாயமடைந்தனர். படுகாயமடைந்த அனைவரும் மீட்கப்பட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர். ஆனால், சிலிண் டர் விபத்தில் படுகாயமடைந்தவர்களில் கடந்த 2 நாட்களில் 10 பேர் உயிரிழந்துள்ளனர். இதன் காரணமாக திருமண வீட்டில் நடந்த சிலிண்டர் விபத்தில் உயிரிழந்தோர் எண்ணிக்கை 12 ஆக அதிகரித்துள்ளது. மேலும், காயமடைந்தவர்களில் 42 பேருக்கு தொடர்ந்து சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

# ஏர் இந்தியா விமானத்தில் பாம்பு ஒன்று கண்டுபிடிப்பு

## துபாயில் போய் இறங்கிய சமயம்



துபாய்,டிச.11

துபாய் சென்ற ஏர் இந்தியா எக்ஸ்பிரஸ் விமானத்தில் பாம்பு ஒன்று கண்டுபிடிக்கப்பட்டது பரபரப்பை ஏற்படுத்தியது.

கோழிக்கோட்டில் இருந்து துபாய் செல்லும் ஏர் இந்தியா எக்ஸ்பிரஸ் விமானத்தில் பாம்பு ஒன்று கண்டுபிடிக்கப்பட்டது.

நேற்று கேரளாவின் கோழிக்கோட்டில் இருந்து புறப்பட்ட ய737-800 விமானம் துபாய் சர்வதேச விமான நிலையத்தில் தரையிறங்கிய பிறகு விமானத்தின் சரக்கு கிடங்கில் பாம்பு இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. பயணிகள் அனைவரும் பத்திரமாக இறக்கி விடப்பட்டனர். இதையடுத்து சிறிது நேரத்தில், துபாய் விமான நிலையத்தின் தீயணைப்புத்துறை விமானத்தை சுத்தம் செய்யும் பணியில் ஈடுபட்டது. டி.சி.ஜி.ஏ. இந்த சம்பவம் குறித்து விசாரிக்க உத்தரவிட்டதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

துபாயிலிருந்து கோழிக்கோடு வருவதற்காக காத்திருந்த பயணி ஒருவர், துபாய் விமான நிலையத்தில் 7 மணிநேரம் சிக்கித் தவிக்கிறார் என டுவிட்டரில் பதிவிட்டார். அதற்கு பதிலளித்த ஏர் இந்தியா, ணுயீ344 துபாய்-கோழிக்கோடு விமானம் 11 டிசம்பர் அதிகாலை 1:45 மணிக்குப் புறப்படும் என்று தெரிவித்தது. பின்னர் உங்களுக்கு ஏற்பட்ட அசௌகரியத்திற்கு வருந்துகிறோம். நீங்கள் ஓட்டலுக்கு மாற்றப்பட்டிருக்கிறீர்கள் என்று பதிவிட்டது.

# மகாகவி பாரதியாரின் கனவுகளை நிறைவேற்ற பாடுபட்டு வருகிறோம்

## அவரின் பிறந்த தினத்தில் மோடி டுவிட்



புதுடெல்லி,டிச.11

பாரதியாரின் கனவுகளை நிறைவேற்றப் பாடுபட்டு வருகிறோம் என்று பிரதமர் மோடி தெரிவித்துள்ளார். மகாகவி பாரதியாரின் 140 ஆவது பிறந்தநாள் இன்று கொண்டாடப்பட்டுவருகிறது. இதையொட்டி பாரதியாருக்கு பிரதமர் நரேந்திர மோடி டுவிட்டர் புகழாரம் சூட்டியுள்ளார். பிரதமர் மோடி வெளியிட்டுள்ள டுவிட்டர் பதிவில், போற்றுதலுக்குரிய சுப்ரமணிய பாரதியின் பிறந்தநாளன்று அன்னாரை நான் வணங்குகிறேன். அபாரமான துணிச்சல் மற்றும் தலைசிறந்த அறிவு கூர்மையின் எடுத்துக்காட்டாக 'மகாகவி பாரதியார்' விளங்கினார். இந்தியாவின் முன்னேற்றத்தை குறித்தும், ஒவ்வொரு இந்தியரின் வளர்ச்சி குறித்தும் அவர் மாபெரும் கனவு கண்டார். பல்வேறு துறைகளில் அவரது கனவுகளை நிறைவேற்ற நாம் பாடுபட்டு வருகிறோம் என்று பதிவிட்டுள்ளார்.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# காரைதீவு வைத்தியசாலை பாரிய நெருக்கடியில்: உதவுமாறு தவிசாளர் ஜெயசிறில் வேண்டுகோள்!







(வி.ரி.சகாதேவராஜா)

காரைதீவு வைத்தியசாலை பாரிய மருந்துத் தட்டுப்பாட்டுடன் இன்னோரன்ன வசதியீனங்களுக்கு மத்தியில் இயங்கிக்கொண்டிருக்கின்றது. எனவே இந்த இக்கட்டானநிலையில் இருந்து மீள்வதற்கு பொது அமைப்புகள், ஆலயங்கள், தனவந்தர்கள் உடனடியாக உதவமுன் வேண்டும்.

– இவ்வாறு காரைதீவு பிரதேச சபை தவிசாளர் கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில் பகிரங்கமாக வேண்டுகோள் விடுத்தார்.

கடந்த வெள்ளிக்கிழமை வைத்தியசாலைக்குச் சென்ற அவர் காரைதீவு பிரதேச வைத்தியசாலை பொறுப்பதிகாரி டாக்டர் ந.அருந்திரன், வைத்திய அதிகாரி டாக்டர் சாந்தி விவேகானந்தராஜா ஆகியோரைச் சந்தித்து கலந்துரையாடினார்.

அதன்பின் அவர் அங்கு கருத்து தெரிவிக்கையில்–

மின்வெட்டு நேரங்களில் வைத்தியசாலை கும்மிருட்டில் மூழ்கிறது. சிறுபிள்ளைகளுக்கான பனடோல் சிறப் தொடக்கம் வயதுவந்தவர்களுக்கான இரத்த அழுத்தம், நீரிழிவு வருத்தம் என்பவற்றிற்கான மருந்துகள் எதுவுமின்றி இயங்கிக்கொண்டிருக்கின்றது.

நாட்டு நிலமை காரணமாக மருந்துதட்டுப்பாடு நிலவுவதாகவும் பொதுவாக எல்லா வைத்தியசாலைகளிலும் இப்பிரச்சினை காணப்படுவதாகவும் தெரிகிறது.

மக்கள் நிதி நெருக்கடியில் சிக்கித் தவிப்பதால் நோய்களைக்குணப்படுத்த அரசவைத்தியசாலைகளையே நம்பியுள்ளனர். அந்தவகையில் இந்த மருந்துதட்டுப்பாட்டு நிலமை ஏழை மக்களை பெரிதும் பாதித்துள்ளது.

வரும் காலங்களில் நிலைமை இன்னும் மோசமடையலாம். மேலும் தற்போது நாட்டில் 2 மணித்தியாலயம் 20 நிமிடங்கள் மின்வெட்டு அமுல்படுத்தப்படுகின்றது. இவ்வேளையில் வைத்தியசாலை இருளில் மூழ்கி காணப்படுவதுடன் இவ்வேளையில் நோயாளர்களுக்கான அவசர சிகிச்சைகளையும் வழங்கமுடியாமல் திணறி வருகின்றனர். ஜெனறேற்றர் இருந்தும் எரிபொருள் வழங்கப்படாமையால் இந்நிலமை கடந்த மூன்று மாதங்களாகக் காணப்படுவதாக வைத்தியர் ந. அருந்திரன் தெரிவிக்கின்றார். மின்சாரம் இல்லாத வேளையில்,ரோர்ச் லைட் மற் றும் செல்போன் வெளிச்சத்தில் தாதியர்கள் சேவையாற்று வதை அவதானிக்க முடிகின்றது.

தற்போதைய நிலையில் ஒரு நாளைக்கு 5 லீற்றர் எரிபொருள் வீதம் மாதம் 150 லீற்றர் எரிபொருள் தேவைப்படுவதாக அறியக்கிடைக்கின்றது. சகோதர இன மக்களின் வைத்தியசாலைகளில் பொது அமைப்பினரும், தனவந்தர்களும் எரிபொருள், மருந்து பிரச்சினைகளைப் பொறுப்பெடுத்து நிவர்த்திசெய்து வருகின்றனர் எனவும் அறியக்கிடக்கின்றது.

எனவே நாட்டு நிலமை சரியாகும்வரை இவற்றிற்கு இடைக்கால தீர்வொன்று அவசியமாகவுள்ளது.

அங்குள்ள அபிவிருத்தி குழு கடந்த இரண்டு வருடங்களாக இயங்கவில்லை. அதனால் வைத்திய அதிகாரி அனைத்து பணிகளையும் தமது குழுவினருடன் இணைந்துமுடியுமானசேவையைசெய்துவருகின்றார்.அவரைப் பாராட்டுகிறேன். இது தொடர்பாக அவர் கடந்த 8 ஆம் திகதி வியாழக்கிழமை இரவு 7 மணியளவில் கூட்டமொன்றைக் கூட்டினார்.நானும் சென்றேன்.

அதன்படி இந்த இக்கட்டான நிலையில் இருந்து மீள்வதற்கு பொது அமைப்புகள், ஆலயங்கள். தனவந்தர்கள் உடனடியாக உதவமுன்வர வேண்டும் .

வைத்திய அதிகாரியிடம் தொடர்பு கொண்டு( யொலைபேசி இலக்கம் 774004949) தாராளமாக உதவலாம்.அது நன்கொடையாக ஏற்றுக்கொள்ளப்படும். – என்றார்.

# தென்கிழக்குப் பல்கலையில் நேற்று மனித உரிமைகள் தின நிகழ்வுகள்







(நூருள் ஹுதா உமர்)

சர்வதேச மனித உரிமைகள் தினத்தை முன்னிட்டு இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு மற்றும் இலங்கை தென் கிழக்கு பல்கலைக்கழக இஸ்லாமிய கற்கைகள் மற்றும் அரபு மொழி பீடத்தின் இஸ்லாமிய சட்டம் மற்றும் சட்டமியற்றல் பிரிவு இணைந்து ஒரு நிகழ்வை ஏற்பாடு செய்து இருந்தன. இந்நிகழ்வு சர்வதேச மனித உரிமைகள் தினமான நேற்று அப்பீடத்தின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

இவ்வாண்டுக்கான சர்வதேச மனித உரிமைகள் தினத்தின் தொனிப்பொருளாகிய ஞூ ஜுழிஸள ழி ஸலிஷ்உள என்ற தொனிப்பொருளிலேயே இந்நிகழ்வு இடம்பெற்றது.

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் கல்முனை பிராந்திய இணைப்பாளர் ஏ. ஸி அப்துல் அஸீஸ் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், இலங்கை தென் கிழக்கு பல்கலைக்கழக முகாமைத்துவ பீடத்தின் துறைத் தலைவர் பேராசிரியர் கலாநிதி ஏ. எம் முஸ்தபா பிரதம அதிதியாக கலந்து கொண்டார்.

தலைமை உரையை இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் கல்முனைப் பிராந்திய இணைப்பாளர் ஏ. ஸி அப்துல் அஸீஸ் நிகழ்த்தினார். இவர் தனது உரையில் அடிப்படை உரிமைகள் தொடர்பாகவும், அவ்வுரிமைகள் மீறப்படும் போது அதனைப் பெற்றுக் கொள்வதற்காக செயற்படுத்த வேண்டிய மூலோபாயங்கள் தொடர்பாகவும் தெளிவுபடுத்தினார்.

அதனைத் தொடர்ந்து இஸ்லாமிய சட்டம் மற்றும் சட்டமியற்றல் பிரிவின் தகுதிகாண் விரிவுரையாளர் எம். எம் சியானா 'இஸ்லாத்தின் பார்வையில் மனித உரிமைகள்' எனும் தொனிப்பொருளில் சிறப்பு உரையை ஆற்றினார்.

தொடர்ந்து பொறியியலாளர் எம். எம் பதுலுல் ஹக், எதிர்கால சந்ததியினர்க்கான உரிமைகள் தொடர்பாகவும் அதற்காக நாம் ஆற்ற வேண்டிய பணிகள் குறித்தும் ஒரு விசேட உரையை ஆற்றிச் சென்றார். இந்நிகழ்வின் பிரதம அதிதி உரையை தென் கிழக்கு பல்கலைக்கழக முகாமைத்துவ பீடத்தின் துறைத்தலைவர் ஏ. எம் முஸ்தபா 'இலங்கையின் பொருளாதார நெருக்கடியும், மனித உரிமை மீறல்களும்' எனும் தலைப்பில் ஆற்றினார்.

நன்றியுரையை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் கல்முனை பிராந்தியத்தில் முகாமைத்துவ உதவியாளர் ஜே. துரைராணி வழங்கினார்.

இந்நிகழ்வில் மேற்படி பீடத்தின் விரிவுரையாளர்கள், உதவி விரிவுரையாளர்கள், கல்விசாரா ஊழியர்கள், மாணவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

# கிழக்கில் 40 பாடசாலைகளுக்கு சீனாவின் சூரிய ஒளி விளக்குகள்





(ஹஸ்பர்)

கிழக்கு மாகாண ஆளுனர் அனுராதா யஹம்பத்தின் வேண்டுகோளுக்கிணங்க இலங்கைக்கான சீனத் தூதுவரினால் கிழக்கு மாகாணத்திலுள்ள பாடசாலைகளுக்கு சூரிய ஒளி (சோலர் வலு) விளக்குகள் வழங்கும் விசேட நிகழ்வு திருகோணமலையிலுள்ள ஆளுநர் அலுவலகத்தில் கடந்த வியாழனன்று இடம்பெற்றது.

சீனாவின் யுன்ஹான் மாகாண மக்கள் சங்கத்தின் கைகோர்த்து நிகழ்ச்சியின் மூலம் கிழக்கு மாகாணத்தில் தெரிவு செய்யப்பட்ட 40 பாடசாலைகளுக்கு இந்த சூரிய மின் விளக்குகள் விநியோகிக்கப்பட உள்ளன. இதனை அடையாளப்படுத்தும் வகையில் திருகோணமலை மாவட்டத்தில் உள்ள 14 பாடசாலைகளை ஆளுநரும் சீனத் தூதரகத்தின் பிரதித் தூதுவர் ஹு வெய்யும் பார்வையிட்டனர்.

இந்நிகழ்வுக்கு முன்னதாக ஆளுநருக்கும் சீனக் குழுவினருக்கும் இடையிலான சந்திப்பு இடம்பெற்றது.

இந்நிகழ்வில் ஆளுநரின் செயலாளர் எல்.பி.மதநாயக்க, மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் எச்.இ.எம்.டபிள்யூ. ஜி திஸாநாயக்க, திருகோணமலை மாவட்ட வலயக் கல்விப் பணிப்பாளர்கள், அதிபர்கள், சீனத் தூதரக பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# வவுனியாவில் தமிழ் எம்.பிகள் மீது அழுகிய தக்காளிப்பழம் வீசி தாக்கு!












வவுனியாவில் தமிழ் எம்.பிகளின் பதாதை மீது அழுகிய தக்காளிப் பழம் வீசப்பட்டு ஆர்ப்பாட்டப் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

வவுனியா, ஏ9 வீதியில் வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு முன்பாக கொட்டகை அமைத்து 1120 ஆவது நாளாக போராட்டத்தில் ஈடுபட்டு வரும் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளால் அவர்களது போராட்ட கொட்டகை முன்பாக நேற்று (சனிக்கிழமை) முன்னெடுக்கப்பட்ட போராட்டத்தின் போதே தமிழ் எம்.பிகளின் பதாதை மீது அழுகிய தக்காளிப் பழம் வீசப்பட்டுள்ளது.

சர்வதேச மனித உரிமைகள் தினத்தை முன்னிட்டு போராட்டத்தில் ஈடுபட்ட தாய்மார் 'அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தின் கொடிகளை ஏந்தியவாறும், காணாமல் ஆக்கப்பட்ட தமது உறவுகளின் படங்களை தாக்கியவாறும் போராட்டத்தில் ஈடுபட்டதுடன், தமக்கு நீதி வேண்டும் எனவும், நீதி மறுக்கப்பட்ட நாட்டில் மனித வுரிமைகள் தினம் எதற்கு' எனவும் கோம் எழுப்பியதுடன், அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தின் பங்களிப்பு இன்றி அரசாங்கத்துடன் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பேச்சுக்கு செல்லக் கூடாது எனவும், இது அரசாங்கத்தை காப்பாற்றும் முயற்சி எனவும் தெரிவித்தனர்.

இதன்போது, காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்மந்தன், தமிழரசுக் கட்சி தலைவர் மாவை சேனாதிராஜா, தமிழ் மக்கள் தேசியக் கூட்டனியின் நாடாளுமன்ற உறுப்பினர் சி.வி.விக்கினேஸ்வரன், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், சி.சிறிதரன், த.சித்தார்த்தன், எம்.ஏ.சுமந்திரன், வினோநோகராதலிங்கம், கோவிந்தம் கருணாகரன், ஈ.பி.ஆர்.எல் கட்சியின் தலைவர் சுரேஸ் பிறேமச்சந்திரன் ஆகியோரது உருவம் பொறிக்கப்பட்ட பதாதைக்கு அழுகிய தக்காளிப் பழத்தால் வீசி, மத்தியஸ்தம் இன்றி அரசாங்கத்துடன் தனித்து பேச்சுக்கு செல்லாதீர்கள், இலங்கை அரசாங்கத்தைகாப்பாற்றாதீர்கள் எனக் கூறி தக்காளிப் பழங்களை வீசித் தாக்கினர்.

இந்த ஆர்ப்பாட்டம் சுமார் ஒரு மணிநேரம் இடம்பெற்றதுடன், இதில் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் பலரும் கலந்து கொண்டனர். (100)

# சர்வதேச மனித உரிமைகள் தினத்தில் விசேட நிகழ்வுகள்!









சர்வதேச மனித உரிமைகள் தினமான நேற்று (சனிக்கிழமை) மகளீர் அபிவிருத்தி நிலையத்தினரின் ஏற்பாட்டில் இடம்பெறும் விசேட நிகழ்வு யாழ்ப்பாண பொது நூலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

மகளீர் அபிவிருத்தி நிலையத்தினரின் ஏற்பாட்டில் பால் நிலை வன்முறைக்கு எதிரான 16 நாள் செயற்திட்டத்தின் நிறைவு தினத்தை முன்னிட்டு திருமதி மாலினி அஜந்தன் தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெற்றது. மேற்படி நிகழ்வில் மகளீர் அபிவிருத்தி நிலையத்தால் நடத்தப்பட்ட பால்நிலைவன்முறைக்கு எதிரானதீர்வுகள் தொடர்பான ஆசிரியர்களுக்கான கட்டுரை போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில்களும் வழங்கி வைக்கப்பட்டன. மற்றம் என்பது முதலில் தனி மனிதனில் இருந்து ஏற்பட வேண்டும். குடும்ப உறவுகள் சீராக பேணப்படுகிற நிலையில் சமூகக் கட்டமைப்புகளில் பிறழ்வுகள் ஏற்படாது என கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் ரூபவதி கேதீஸ்வரன் தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியல் கல்லூரியின் சேஷ்ட விரிவுரையாளர் ஜெயலட்சுமி உதயகுமார், தேசிய இளைஞர் சேவைகள் மன்ற வடக்கு மாகாண முன்னாள் பணிப்பாளர் விமலேஸ்வரி ஸ்ரீகாந்த ரூபன் மற்றும் பாடசாலை அதிபர்கள் போட்டியாளர்கள் பெண்கள் அமைப்புகளை சேர்ந்தோர் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

# தும்பங்கேணியில் பெண் வீதியில் விழுந்து மரணம்



மட்டக்களப்பு மாவட்டத்தின் வெல்லாவெளி பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட தும்பங்கேணி 40ஆம் கிராமத்தில் நிலவிய சீரற்ற காலநிலை காரணமாக பெண்ணொருவர் உயிரிழந்துள்ளார்.

பெரியகல்லாறு பிரதான வீதியை சேர்ந்த நாகமணி பூமலர் என்னும் பெண்ணே இவ்வாறு உயிரிழந்துள்ளார் என அடையாளம் காணப்பட்டார் என பிரதேச கிராம சேவையாளர் தெரிவித்தார்.

பெரியகல்லாறிலிருந்து 40ஆம் கிராமத்திற்கு பஸ்ஸில் வியாழன் மாலை வந்திறங்கி மயான வீதியால் நடந்து சென்றுகொண்டிருக்கும்போதே அவர் வீழ்ந்து உயிரிழந்துள்ளார் என அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

அப்பகுதியால்அடுத்தநாள்காலையே சென்றவர்கள் சடலத்தைக் கண்டு பிரதேச கிராம சேவையாளருக்கு அறிவித்துள்ள நிலையில் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

கடுமையான குளிர் மற்றும் மழையுடனான காலநிலை நிலவிவரும் நிலையில் அதன்காரணமாக இந்தஒ பெண் உயிரிழந்திருக்கலாம் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

அப்பகுதிக்கு சென்ற வெல்லாவெளி பொலிஸார்சடலத்தை பார்வையிட்டதுடன் இதுதொடர்பானமேலதிகவிசாரணைகளை முன்னெடுத்துவருகின்றனர்.

## மேலும் 3......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்று ஹட்டன் பொலிஸ் பிரிவின் இலஞ்சஒழிப்புப்பிரிவுதெரிவித்துள்ளது.

ஹட்டன் பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்தஸ்டுவர்ட்என்றபோதைப்பொருள் தொடர்பில்விசேடபயிற்சிபெற்றமோப்ப நாயைப் பயன்படுத்தி இந்தச் சோதனைகள் மேற்கொள்ளப் படுகின்றன என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அதன்படி நேற்று (10) ஹட்டன் கொழும்பு பிரதான வீதியின் தியகல பொலிஸ் வீதித் தடை வழியாக சிவனொளிபாதமலைக்குச் சென்ற பஸ்கள் மற்றும் பிற வாகனங்களைச் சோதனையிட்ட போது கஞ்சா மற்றும் சட்டவிரோதமான முறையில் புகைத்தல் பொருட்களை வைத்திருந்த மூன்று சந்தேகநபர்களைப் பொலிஸார் கைது செய்துள்ளனர். குறித்த சந்தேகநபர்கள் 20 க்கும் 30 க்கும் இடைப்பட்ட வயதுகளைக் கொண்டவர்கள் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்டவர்கள் விசாரணைகளின் பின்னர் ஹட்டன் நீதிமன்ற நீதிவானிடம் முன்னிலைப்படுத்தப்படவுள்ளனர்.

## பாடசாலைகள்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மற்றும் அரச அங்கீகாரம் பெற்ற அனைத்து தனியார் பாடசாலை களுக்கும் கடந்த வெள்ளிக்கிழமை விசேட விடுமுறை வழங்கப்பட்டிருந்தது.

இந்நிலையிலேயே கல்வி இராஜாங்க அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

இது தொடர்பான உத்தியோகபூர்வ அறிவிப்புஇன்றுமாலைவெளியிடப்படும் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

## இலங்கையின்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இவ்வாறான முயற்சிகளை முறியடிக்குமாறு பௌத்த மகா சங்கத்தினர் தலைமையிலான மதத் தலைவர்களிடம்அவர்கோரிக்கைவிடுத்துள்ளார்.

நீர்கொழும்பில் இன்று நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றிய கர்தினால் ரஞ்சித், நாட்டை உயர்த்த சிந்தனையில் மாற்றம் பிறக்க வேண்டும் என்றும் மேலும் தெரிவித்துள்ளார்.

## நாய்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாய் ஒன்று, மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தின் போது மோட்டார் சைக்கிளில் இராணுவத்தினர் இருவர் பயணித்துள்ளதுடன் அவர்களில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவர் தம்பகல்ல பிரதேசத்தில் வசித்து வந்த, 41 வயதுடைய இராணுவ சார்ஜன்ட் ஆவார்.

விபத்தில் படுகாயமடைந்த மற்றைய இராணுவச் சிப்பாய் வெல்லவாய ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு, மேலதிக சிகிச்சைக்காக பின்னர் மொனராகலை மாவட்ட பொது வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை வெல்லவாய பொலிஸ் நிலைய அதிகாரிகள் மேற்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை, இந்தச் சம்பவம் அருகில் உள்ள வர்த்தக நிலையம் ஒன்றில் பொருத்தப்பட்டிருந்த சி.சி.ரி.வி. கமராவில் பதிவாகியுள்ளது.

# விசேட தேவையுடையோர் 27 பேருக்கு திருமலையில் செயற்கை அவயவங்கள்

## மாவட்ட செயலக நிகழ்வில் வழங்கி வைப்பு





(ஹஸ்பர்)

திருகோணமலை மாவட்டத்தை சேர்ந்த விசேட தேவையுடைய 27 பேர்களுக்கான செயற்கை அவயவங்கள் வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் ருகோணமலை மாவட்ட செயலகத்தில் மேலதிக அரசாங்க அதிபர் ஜே.எஸ்.அருள்ராஜ் தலைமையில் நடைபெற்றது.

தற்போதைய பொருளாதார நெருக்கடி மிக்க இச்சூழ்நிலையில் அரச சார்பற்ற நிறுவனங்கள் இவ்வாறான உதவிகளினை விசேட தேவையுடையோருக்க் வழங்குவது சிறப்பிற்குரியது. விசேட தேவையுடையோரை ஒருபோதும் வேறுபடுத்தி நோக்க முடியாது. அவர்களுடைய தேவைகள் குறித்து விசேட கவனம் செலுத்தப்பட்டு வருகிறது என இதன்போது மேலதிக அரசாங்க அதிபர் தெரிவித்தார்.

ஒரு செயற்கை அவையமொன்றின் பெறுமதி ஐம்பதாயிரம் ரூபாவாகும்.

இலங்கைக்கான ஆஸ்த்திரேலிய தூதரகம் இதற்கான அனுசரனையை வழங்கியமை குறிப்பிடத்தக்கது.

மாவட்ட செயலக சமூக சேவைகள் பிரிவு இதற்கான ஒழுங்கேற்பாடுகளை மேற்கொண்டது.

விளம்பரத் தொடர்புகளுக்கு -
தொலைபேசி இலக்கம்-
076 443 8622

